# காமன்வெல்த் மக்களுக்கு மகாராணியின் நத்தார் செய்தி

Registe d as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

அன்பர்கள் - ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்புகலந்த
நத்தார் வாழ்த்துக்கள்
உரித்தாகுக !

கணேசன் ஸ்ரோர்ஸ்
(பிரபல புடவை மாளிகை)
78, 63, கே.கே.எஸ்.ரோட்—யாழ்ப்பாணம்
போன்: 7169

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 316
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 10 ஷவ்வால் 25 வெள்ளிக்கிழமை (25-12-70)

எல்லோருக்கும் எமது அன்புகலந்த
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கலண்டர்
10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ஒரு பொக்கற் கலண்டரும், ஒரு மேசைக் கலண்டரும் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்
சோப் தொழிற்சாலை
த பெ. இல. 77 - யாழ்ப்பாணம்



லண்டன், டிச 25

'கிறிமஸ் ஒரு குடும்பப் பண்டிகை என்பதையும், அனைவரும் ஒன்று கூடும் அரிய தருணம் என்பதையும் வருடம் தோறும் நாம் நினைவு கூறுகிறோம். உலகத்தின் மறுகோடிக்கு நான் மேற்கொண்ட உல்லாசமான பயணங்களை எண்ணும்போது, இவ்வாண்டு ஒரு பிரத்தியேகமான குடும்பத்தைப்பற்றி அதாவது சாம்ராஜ்ய நாடுகளைக் கொண்ட குடும்பத்தைப் பற்றி எனக்கு நினைவு வருகிறது'. இவ்வாறு எலிசபெத் மகாராணியார் காமன் வெல்த் நாடுகளின் மக்களுக்கு விடுத்துள்ள கிறிஸ்மஸ் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்தப் பயணங்களின் போது பல நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு இனங்களைச் சேர்ந்த, பலவகையான தொழில்களைச் சேர்ந்த பெருந்தொகையான மக்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. இவ்வகையான பிரிவுகள் மத்தியிலும் ஒரு பொதுவான அம்சம் இல்லாமல் இல்லை. அது என்னவெனில் இவர்கள் அனைவரும் சாம்ராஜ்யமென்னும் குடும்பத்தின் அங்கத்தவர்கள் என்பதுதான்'.

'இவ்வருட ஆரம்பத்தில் பிஜி, டொன்கா, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா

(4-ம் பக்கம் பார்க்க)

# வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் புதியதிட்டம்

## முதல் கட்டம் கண்டியில் ஆரம்பம்

கோட்டை, வியா.

பிரிவுகள்தோறும் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க வேண்டும் என்ற மக்கள் அரசாங்கத்தின் திட்டத்தின்படி முதலாவது பிரிவு அபிவிருத்தித் திட்டம் மலையகத் தலைநகரான கண்டியில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

யட்டிநுவரையில் ஆரம்பமாகும் இப்புதிய திட்டத்தை செயல்படுத்தும் முறைகள் குறித்து யட்டிநுவர காரியாதிகாரி கண்டி அரசாங்க அதிபர் ஆகியோரும் பயிர் செய்கைக்குழுக்கள் சனசமூக நிலையங்கள் ஆகியனவும் சமீபத்தில் கூடி ஆராய்ந்துள்ளன.

ஆரம்பத் திட்டமான இதன்மூலம் கண்டிப்பகுதியை வளங்கொழிக்கச்செய்ய வேண்[டும்] எனவும் சிறுகைத் தொழில்களை நிறுவி வேலையில்லாப் பிரச்னையைதீர்க்க இத்திட்டத்தின் வாய்ப்புண்டு எனவும் கண்டி அரசாங்க அதிபர் மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கண்டிப் பகுதியில் இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டதும் நாட்டின் மற்றைய பிரிவுகளிலும் இத்திட்டத்தை ஆரம்பித்து செயல்படுத்த அரசாங்[கம்] தீர்மானித்துள்ளது.

சங்கானையில்

## மின்தறி நெசவாலையை மந்திரி திறந்து வைப்பார்



யாழ்ப்பாணம், வெள்ளி

வலிகாமம் மேற்கு பல நோக்குக் கூட்டுறவு சங்க சமாஜ மின்தறி நிலையத்தை வர்த்தக மந்திரி திரு. ரி. பீ. இலங்கரத்தின நாளை 26ம் தேதி திறந்துவைப்பார். இவ்விழாவில் தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர் கலந்துகொள்வார்.

அன்று பிற்பகல் 4-15 மணிக்கு சங்கானை கிழக்கு மத்திய பல நோக்கு கூட்டு[றவு]...

வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின மின்தறி நிலயத்தை திறந்துவைப்பார். திருமதி தாமரை குமாரி இலங்கரத்தின விளக்கேற்றிவைப்பார்.

தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர், காலஞ்சென்ற ஏ. ரி. வல்லிபுரத்தின் படத்தை திரைநீக்கம் செய்துவைப்பார்.

4-30 மணிக்கு நடக்கும் பொதுக் கூட்டத்தில் தபால் மந்திரி திரு. செ குமாரசூரியர் தலைமையுரை நிகழ்த்துவார். பல நோக்கு கூட்டுறவு சங்க சமாஜத் தலைவர் திரு வி இராஜசுந்தரம் அறிக்கையை சமர்ப்பிப்பார்.

வட்டுக்கோட்டை எம் பி திரு ஏ தியாகராசா, திருமதி தாமரை குமாரி இலங்கரத்தின, வர்த்தக மந்திரி திரு ரி பி இலங்கரத்தின ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள் மாலை 5-30 மணிக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜ நிர்வாகி...

## இரவு 9 மணிக்குமேல் திறக்கக்கூடாது

கோட்டை, வியாழன்

இறைச்சி, மீன், வெற்றிலை, பாக்கு, புகையிலை, பீடி, சிகரெட் முதலியன விற்கும் கடைகள் இனிமேல் இரவு 9 மணிக்குமேல் திறந்து வைத்திருக்கக்கூடாது.

இக்கடைகள் காலை 8 மணிக்கு முன்னர் திறக்கப்படக்கூடாதென்றும் இரவு 9 மணிக்குமேல் திறந்து வைத்திருக்கக்கூடாது என்றும் புதிய சட்டவிதி கூறுகிறது. வருடத்தில் 14 நாட்கள் மட்டும் இரவில் 12 மணி வரை இக்கடைகள் திறந்திருக்க அனுமதி வழங்கப்படும்.

தேநீர்க்கடைகள் சிற்றுண்டிச்சாலைகள், உணவு விடுதிகள், குடியிருப்பு ஹோட்டல்கள், பெட்ரோல் நிலயங்கள், சினிமாத்தியேட்டர்கள் ஆகியவற்றுக்குச் சட்டம் விலக்களிக்கிறது.

கடைகளில்வேலைசெய்யும் தொழிலாளர்களின் நலன் கருதியே இப்புதியசட்டம் இயற்றப்பட்டுள்ளது.

ரயிலில் திருட்டுப்போன!

## ரூ.10,000 பெறுமதியான நகைகள் சிக்கின!

யாழ்ப்பாணம், வெள்ளி.

சில வாரங்களுக்கு முன்னர் இரவு மெயில் வண்டியில் 10.000 ரூபா பெறுமதியான நகைகளுடனும் துணிகளுடனும் திருட்டுப்போன சூட்கேசை வவனியாவில் நேற்று பொலிசார் கண்டுபிடித்தனர்.

மதவாச்சிக்கும் புளியங்குளத்திற்குமிடையில் ரயில் வண்டியில் கடலைவிற்கும் கோஷ்டியினரிடமிருந்து இச்சூட்கேஸ் கைப்பற்றப்பட்டது. இன்ஸ்பெக்டர் டயஸ் இதுபற்றி விசாரணை செய்து வருகிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தலைமை ஆசிரியர் பதவி

ரயில் வேலி...

சிங்களத் தேர்ச்சியை

# மார்ச்மாதம் முதல் கச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவில் தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர் கலந்துகொள்வார்.

அன்று பிற்பகல் 4-15 மணிக்கு சங்கானை கிழக்கு மத்திய பலநோக்கு கூட்டுறவு சங்கத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மின்தறி நிலையத்தை வந்தடையும்.

மதி தாமரை குமாரி இலங்கரத்தின, வர்த்தக மந்திரி திரு ரி பி இலங்கரத்தின ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள் மாலை 5-30 மணிக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜ நிர்வாகிகள் மந்திரிகளையும், மற்றும் உத்தியோகத்தர்களையும் சந்திப்பார்கள்.

யட்டிநுவரையில் ஆரம்ப தொழில்களை நிறுவி வேலை தீர்மானித்துள்ளது.

# வடபகுதிக்கு நாளை இரு அமைச்சர்கள் விஜயம்



யாழ்ப்பாணம், வெள்ளி கூட்டு முன்னணி அரசாங்கத்தைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவும், தபால் தந்திச் சேவை அமைச்சர் திரு. செ. குமாரசூரியரும், நாளை வடபகுதிக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்கின்றனர்கள்.

நாளை காலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவுக்கும், திருமதி தாமரை குமாரி இலங்கரத்தினவிற்கும் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது.

நாளை காலை 8 மணிக்கு பலாலி விமானநிலையத்தில், தபால் தந்தி சேவை அமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு வரவேற்பளிக்கப்படும்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை நடைபெறவிருக்கும் கூட்டுறவு மகாநாட்டில் இரு அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள் நாளை மாலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில், இரு அமைச்சர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

தலைமை ஆசிரியர் பதவி

## 18,000 பேர் விண்ணப்பம்

கோட்டை, வியாழன் தலைமை ஆசிரியர் பதவிக்கு சுமார் 18,000 பேர் விண்ணப்பபித்துள்ளனர் இவற்றுள் 1 000 விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்படும். என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி டாக்டர் உடுகம பிரதேச கல்வி அதிபர்களிடம் '55 வயதில் ஒய்வு' சட்டத்தின் கீழ் ஒய்வு பெற்றுள்ள தலைமை ஆசிரியர்களின் வேலைகளை மேற்பார்வை செய்ய தற்காலிக ஒழுங்குகளைச் செய்யும் படி கட்டளையிட்டுள்ளார். புதிய தலைமை ஆசிரியர் நியமிக்கும் வரையில் அந்தஸ்தில் உயர்வு பெற்ற ஆசிரியர் பதில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரயில் வேயில்

## சிங்களத் தேர்ச்சியை கட்டாயமாக்கக் கோரிக்கை

கோட்டை, வியா ரயில்வேயில் பணி புரியும் ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி கட்டாயமாக்கப் படவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கம் பிரதம மந்திரியிடம் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் வலியுறுத்தியிருக்கின்றது.

ரயில்வே இலாகாவின் நிர்வாகத்துறையிலும் இலிகிதர் துறையிலும் உள்ள ஊழியர்களுக்கு சிங்களம் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் படி தமிழ் மொழியை பயன்படுத்துவதற்காக யு. என். பி. அரசாங்கம் விடுத்த 700 இலக்க திறைச்சேரி சுற்று நிருபத்தை அரசாங்கம் ரதது செய்யும் என்று எதிர்பார்த்தோம் ஆனல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர்களும், சிங்களமொழியின் பாதுகாவலர்களுமான எமது நம்பிக்கை இன்னும் பூர்த்தியாகாமலிருப்பதற்காக வருந்துகிறோம் என்று சங்கம் தெரிவித்திருக்கின்றது (சி பி ஏ)

# மார்ச்மாதம் முதல் கச்சேரி முறையில் மாற்றம்

## காரியாதிகாரிகளுக்கு கூடிய மாற்றம்

கோட்டை, வியாழன் கச்சேரி முறை வருகிற ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து பரவலாக்கப்படவிருக்கிறது. உள்நாட்டு உள்ளுராட்சி பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் இத்திட்டத்தை மந்திரி சபை ஏற்றுக்கொண்டுள்ளது

இப்புதிய திட்டம் கச்சேரி முறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவிருக்கிறது. மக்களின் ஆலோசனையுடன் நிர்வாகத்தை திட்டமிட்டுத் திறம்பட நடாத்துவதற்காகவே இம்முறை மாற்றிமைக்கப்படுகிறது.

கிராம அபிவிருத்தித்திட்டங்கள் நாட்டு மக்களுக்குத் தற்போது தேவைப்படும் அத்தியாவசிய தேவைகள் போன்றவற்றுக்கான ஆலோசனைகள் மக்களிடமிருந்து பெறப்படுமென்றும் இதன் மூலம் அரசாங்கம் நாட்டு மக்களுடன் அடிக்கடி தொடர்புகொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமென்றும் கருதப்படுகிறது.

புதிய கச்சேரி முறையின் படி காரியாதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கும், தற்போது அரசாங்க அதிபர்களினல் கவனிக்கப்பட்டுவரும் பல கருமங்கள் அவ்வப்பகுதி காரியாதிகாரிகளிடம் வருகிற மார்ச் மாதத்திலிருந்து ஒப்படைக்கப்படவிருக்கிறது.

காரியாதிகாரிகள் மேலதிக வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால், காரியாதிகாரி அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் பலர் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

# மக்கள் வங்கி கூப்பன் அடகு பிடிக்கும்?

## அரசு ஆலோசனை

கோட்டை, வியா. மக்கள் வங்கிகளில் கூப்பன் புத்தகங்களை அடகு பிடிக்கும் முறையொன்றை அமுல்நடத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது

இதுசம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நிதி அமைச்சுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சுக்குமிடையே தற்போது நடைபெற்றுவருகிறது. வர்த்தக அமைச்சினல் இப்புதிய திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

மக்கள் வங்கிகளில்கூப்பன் புத்தகங்களை அடகு பிடிப்பதன் மூலம் கூப்பனுக்கு வழங்கப்படும் அரிசியை மிச்சப்படுத்தலாம் என்றும் இதன் மூலம் நாட்டுக்கு அதிக நயம் கிடைக்கும் என்றும் வர்த்தக அமைச்சு கருதுகிறது' அத்துடன் பணத்தைவட்டிக்குகொடுத்து சுரண்டல் நடத்தும் இரக்கமற்ற நபர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கும் அரிசி உரிமையற்றவர்கள் கையில் போய்சேருவதைக் கட்டுப்படுத்துவதற்கும் இத்திட்டம் உதவும் என வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவிடம் தெரிவித்துள்ளார்,

அரசாங்க தேவைகளுக்கு கூப்பன் புத்தகங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், மக்கள் வங்கியினல் அடகுபிடித்தற்கு அத்தாட்சியாக வழங்கப்படும் ரசிதைக்காண்பிக்கலாம் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைத்தியருக்கு பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், வெள்ளி வட்டுக்கோட்டை டிஸ்பென்சறியில் கடந்த 5 வருடங்களாகக் கடமையாற்றிவிட்டு பதுளைக்கு இடமாற்றலாகிச் செல்லும் உதவி வைத்திய அதிகாரி திரு. வி. கனகரத்தினத்தின் சேவையைப் பாராட்டி வட்டுக்கோட்டை மக்கள் பிரிவுபசார விழாவொன்றைப் பிரமாண்டமான முறையில் நடாத்துகின்றனர். வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஓய்வுபெற்ற அதிபர் திரு சிவகுருநாதன் தலைமையில் மேற்படி விழா நடைபெறும், விழா ஆரம்பத்தில் திரு. கனகரத்தினம் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்.

# 'அரசாங்க அதிபர் நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிப்பு'

## ஓய்வுபெறும் மேலதிக அரசாங்க அதிபர் குறை

— கு. வி. மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், வெள்ளி 'தமிழ் காரியாதிகாரிகளுக்கு அரசாங்க அதிபர்கள் நியமனம் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது' 31வருட காலசேவைக்குப்பின்னர் ஒய்வு பெற்ற யாழ். மேலதிக அரசாங்க அதிபர்திரு ஜே எம் சபாரத்தினம்நேற்றுயாழ்அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில்இவ்வாறு எடுத்துக்கூறினர்.

திரு, சபாரத்தினம்மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பல தமிழ் காரியாதிகாரிகள் இவ்வித நிலைமையினல் எவ்வளவோ திறமைசாலிகளாக இருந்தும், பொறுப்புடன் கடமையாற்றி வந்தும் உயர்பதவி கிக்கமுடியாதிருக்கிறது.

சோஷலிஸ அமைப்பு முறையில் திறமைக்குமுதலிடம் அளிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நாடு பல துறைகளில் முன்னேற முடியும். நாட்டில் எல்லா சமூகங்களிடையேயும் மனக்கசப்பற்ற ஐக்கியம் ஏற்பட்டால்தான் முன்னேற்றம் சாத்தியமாகும் ஒவ்வொருவரும் தமது திறமையை நாட்டின் நலன்கருதி அதன் சிறப்புக்காகப் பயன்படுத்த வேண்டும்.

அரசியலில்கலந்து கொண்டால்தான் நாட்டுக்கு நன்மை செய்ய முடியும் முடியும் என்ற வாதத்தை என்னல் ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியலில் கலந்து கொள்ளாமலேயே உண்மையான சேவை செய்ய முடியும்.

எனது சேவையை யாழ்ப்பாணக் கல்லூரி விரும்பியிருக்கிறது. இது பற்றி நான் ஆலோசனை செய்து வருகிறேன். கடமையை உணர்ந்து செயலாற்றினல் அது நல்ல பலனை அளித்தே தீரும்.

அரசாங்க அதிபர் திரு. விமல் அமலசேகராதிரு சபாரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசுகையில் கூறியதாவது:

திரு. சபாரத்தினம் எனக்குப் பல துறைகளில் உதவியாகவும் ஒரு. வழிகாட்டி போலவும் இயங்கி வந்துள்ளார். அவரது கடமையுணர்ச்சி மிக்க பரிபூரண சேவை பெரிதும் போற்றத்தக்கது. அரசாங்க சேவை ஊழியர்கள் எப்படி கடமையாற்ற வேண்டும் என்பதற்கு ஒரு முன் மாதிரியாக அவர் விளங்கினர். அவரது நல்ல கொள்கைகளைப் பின்பற்றினல் பலர் வாழ்வில் முன்னேற மிகவும் உதவியாக இருக்கும்.

வைபவத்துக்கு தலைமை தாங்கிய திரு. ரி. முருகேசு கூறினர்.

சம்பிள்ளை பேசுகையில் திரு. சபாரத்தினம் திறமைமிக்க நிர்வாகியெனவும் இரக்க சிந்தை படைத்தவரெனவும்

திருவாளர்கள் முத்துவேலு, முருகேசு, சூசைப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

## மரண அறிவித்தல்

### கே. பூபாலசிங்கம் (தனபாலசிங்கம்)

கொண்டாவில் போக்குவரத்துச்சபைபொறியியல் பகுதியைச் சேர்ந்த திரு கே. பூபாலசிங்கம் அல்லது தனபாலசிங்கம் காலமாகி விட்டார். இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஆயுள்வேத டாக்டர் திரு எம் குருசாமி, திருமதி குருசாமியின் அருமை மகனும், கொட்டடி நமசிவாய வித்தியாலய ஆசிரியை கண்மணியின் அருமைக் கணவரும், மன்மதராயன், நவமணி, சோமாவதி கனகாம்பிகை ஆகியோரின் சகோதரருமாவர். அன்னரின் பூதவுடல் இன்று [25-12-70] வெள்ளிக்கிழமை 4 மணியளவில், கொக்குவில் மயானத்திற்குதகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இத்தகவலையேற்றுக்கொள்ளவும். பரமேஸ்வராக்கல்லூரி சந்தி. திருநெல்வேலி யாழ்ப்பாணம். 2169

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா —அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

ரஸிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்

மனோஹரா — யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்
நத்தார் பண்டிகையை முன்னிட்டு இன்று 4 காட்சிகள்
என். டி. ராமராவ், கே. ஆர். விஜயா, ராஜ்ஸ்ரீ
நடித்த

# லக்ஷ்மி கடாட்ஷம்

ரஸிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருககும்

எஸ். ரி. ஆர்.
பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்

தமது அன்புகலந்த
நத்தார்—புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்

ராஜா - யாழ். நகர்

தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

- சகல மதத்தினருக்குமான தீந்தமிழ் சித்திரம்
- ஓசன்னு பாட்டுக்கான இசை அமைப்பு தேன்போன்றது
- கடலின்மேல் ஏசுநாதர்நடப்பது, பாலைவனம்-குன்று ஆகியவற்றில் ஏசுநாதர் உபதேசம் செய்வது அருமையாக இருக்கின்றன.
- சலொமை அர்ச். ஜோவரனின் தலையைக்கேட்டு ஆடும் கவர்ச்சி நடனத்தைப் பார்க்கத் தவறுதீர்கள்.

# ஏசுநாதர்-தமிழ்

இப்படத்துடன் பாப்பரசரின் இலங்கை விஜயம்
தமிழில் 40 நிமிடங்கள் வரை
காண்பிக்கப்படும்.

ரஸிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இங்கிலாந்தில் செய்யப்பட்ட, புதிய டின்னர் செற்றும், தேநீர் செற்றும் முதிரை கண்ணாடி கபிநெற்றில் விற்பனைக்குண்டு. பார்வையிடலாம். கமறன் ஸ்தான், டச்சுரோட், உடுவில். 2601

யாழ்ப்பாணத்தில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக் காணியும். விலை ஐம்பதாயிரம். கடன் வசதி கிடைக்கும். வெஸ்ட்டன்றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 2562

### தேவை

நடிக நடிகையர் தேவை. நவரச நாடகாலயம், நாடக, திரைப்பட தயாரிப்பாளர் செயலாளர், 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2594

உங்களுக்கு காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி(Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது. சிடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட், 122, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2604

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 25—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணொரிந்தமிழ், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி.

844 மீ. அல்ட் 49 மீ.

9-30 கிறிஸ்தவநிகழ்ச்சி, 10-00 கிறிஸ்தவநிகழ்ச்சி, 11-15 சிறுவர்மலர்.

பகல் 12-00 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 12-15 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை.

844 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 திருமறைப்பாடல்கள், 7-00 நத்தார்நிகழ்ச்சி, 7-15 பாட்டு, 7-45 நேயர்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### ஏல விற்பனை

1-1-1971 தொடக்கம் 31-12-1971 வரையுள்ள காலத்திற்கு பெரியகடையிலுள்ள, கருவாட்டுக்கடை இல: 18ஐ குத்திகைக்குக் கொடுக்கப்பட இருப்பதால் இக்குத்தகையுரிமை 28-12-1970 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு அவ்விடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இதுசம்பந்தமான இதர விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
23-12-70. 2600

## ரத்தினபுரியில் கோதுமை சாகுபடி

கோட்டை, வியா
ரத்தினபுரி மாவட்டத்தில் பரந்த அளவில் கோதுமை பயிர்ச்செய்கை நடைபெறவிருக்கிறது.

சுமார் 1000 ஏக்கர் நிலத்தில் கோதுமைப் பயிர் செய்கை பண்ணப்படுமென்றும், காலப்போக்கில் விஸ்தரிக்கப்படுமென்றும் ரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கிறார்.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி

### 4ம் கந்தாயம்-1970

1970-ம் ஆண்டு 4-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் திகதி வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன், 10 வீதம் வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகராட்சி மன்ற ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 31-12-70-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் கிடைக்க்கூடியதாக அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும்பொழுது, வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
21-12-70. 2701

## அறிவித்தல்

### மின்விநியோகத் தடை

புங்கன்குளம் உப மின் நிலையத்தில் இருந்து பயனடையும் பாவனையாளர்களுக்கு

மேற்படி உப-மின் நிலையத்திலிருந்து கொழும்புத்துறை நோக்கி மின்சார விநியோகம் செய்யும் மின் கம்பிப் பாதைகளில் அத்தியாவசிய திருத்த வேலைகள் செய்யவேண்டியிருப்பதால் 28-12-70 தொடக்கம் கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு காலை 8-30 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை மின்சாரம் தடைப்படும் என்பதை பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர சபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24-12-1970. 2702

## எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை, வியா
தும்பளையைச் சேர்ந்த வி. தங்கராசா, எஸ். சிவலிங்கம், பி. சீனிவாசகம், கே. கோபாலன் ஆகியோர் அதே ஊரைச் சேர்ந்த அழகேந்திரன் என்பவருடைய பொறுப்பிலிருந்த வாசிகசாலைக்கட்டிடத்தை உடைத்து ரூபா 1000 நஷ்டம் விளைவித்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது சாட்சியங்களில் முரண்பாடு காணப்பட்டதால் மாஜிஸ்திரேட் எதிரிகளை விடுதலை செய்தார்.

யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான
V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள்
அனைவருக்கும் தமது உளங்கனிந்த
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்!

# V.K.இராசரத்தினம்

பிரபல
றேடியோ விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்.
95, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

## கோரிக்கை

ஒட்டிசுட்டான், வியா
முத்துஐயன் கட்டுபடித்த இளைஞர் திட்ட குடியேற்ற பொறுப்பதிகாரி திரு. ஏ. சிங்காரவடிவேலுவை வவுனியாவுக்கு மாற்றம் செய்தமையை ரத்துச் செய்து மீண்டும் முத்துஐயன் கட்டு இளைஞர் குடியேற்றத் திட்டத்திலேயே சேவைசெய்ய அனுமதிக்கும் வண்ணம் மேற்படி இளைஞர் திட்ட பொதுநல வளர்ச்சிச்சங்கம் மகஜர் மூலம் வவுனியா ஆட்சி மன்ற உறுப்பினரையும் அரசாங்க அதிபரையும் காணிவிவசாய அமைச்சரையும் வேண்டியுள்ளது.

## கரைச்சி கி. ச தேர்தல்

கிளிநொச்சி, வியா
கரைச்சிக் கிராமசபைத் தேர்தல் இம்மாதம் 29-ம் திகதி நடைபெறுமென யாழ் மாவட்ட தேர்தல்அதிகாரி அறிவித்துள்ளார்.

மேற்படி கிராமசபையின் 8-ம்வட்டார அங்கத்தவராக திரு. கு. ஐயம்பிள்ளை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே மிகுதி 20வட்டாரங்களுக்கும் தேர்தல் நடைபெறும்

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
நத்தார்—புதுவருட வாழ்த்துக்கள்!

சிறந்த முறையில்
உத்தரவாதத்துடன்
உங்கள்
டயர்களைப் புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்

# நோர்தேன் இன்டஸ்ரீஸ்

8/1, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
போன்: 7158

அனைவருக்கும் அன்பு கனிந்த
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்

இன்றே வருக! நன்றே கொள்க!!

தங்க, வைர நகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்த நாணயமுள்ள ஸ்தாபனம்

வாடிக்கைக்காரர்கள்
மற்றும்
அன்பர்கள் - ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
நத்தார்—புத்தாண்டு வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பிக்கப்படும்.

ரஸிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்

ராஜன், லட்சுமி,
நிர்மலா, ரவிச்சந்திரன்
நடித்த

# ஏன்?

அத்துடன்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு தமிழில் எல்லாக் காட்சி
களிலும் காண்பிக்கப்படுகின்றது

---

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் — புத்தாண்டு வாழ்த்துக்கள்

கெப்பிட்டல் பிளாஸா
திரையிலும்

## யாழ். வெலிங்டன்

திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்‌ஷனில் உருவாகி

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ





முத்துராமன், அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்

# கண்ணன் என் காதலன்

தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

---

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி. இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 திருமறைப்பாடல்கள், 7-00 நத்தார்நிகழ்ச்சி, 7-15 பாட்டு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 வானொலி வைத்தியர், 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

## துணிக் கூப்பன்கள் செல்லாது

கோட்டை, வியாழன்

புதிய ஆண்டுக்கான துணிக்கூப்பன்கள் ஜனவரி முதலாம் திகதி வழங்கப்படும் அதற்குப்பின்னர் தற்போதிருக்கும் கூப்பன் புள்ளிகள் செல்லுபடியாகாததாகும் என வெளிநாட்டு வர்த்தகஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி அறிவித்துள்ளார்.

---

சினிமா ரஸிகர்களுக்கும்
மற்றும் அன்பர்களுக்கும்
எமது உளம் நிறைந்த
நத்தார்—புத்தாண்டு
வாழ்துக்கள்

## வெலிங்டன் சினிமா

மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த

## நம் நாடு

---

சினிமா ரஸிகர்களுக்கும்
மற்றும் அன்பர்களுக்கும்
எமது உளம் நிறைந்த
நத்தார்—புத்தாண்டு
வாழ்த்துக்கள்

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த

## ஔவையார்

---

சினிமா ரஸிகர்களுக்கும்
மற்றும் அன்பர்களுக்கும்
எமது உளம் நிறைந்த
நத்தார் —புத்தாண்டு
வாழ்த்துக்கள்

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
Rod Stiger-Sidney Poitier
in
IN THE HEAT OF THE NIGHT

---

நத்தார்–புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# டயரும்ஸ்

(உங்கள் அபிமான ஜவுளிமாளிகை)
54, 60, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 3 1 6)

---

முன்னணியில் நிற்கும்
சிறந்த நாணயமுள்ள ஸ்தாபனம்

## ராணி ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
மனேஜர்: A. KARAPUTUGALA.

---

எல்லோர்க்கும் எமது நத்தார்–புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உலகிலேயே மிகச் சிறந்தது
பிரகாசமான ஒளி தரக்கூடியது

## “எவரெடி பற்றறிகள்”

வடபகுதியின் மொத்த விற்பனையாளர்களாக நியமிக்கப்பெற்றுள்ளோம் என்பதை இப்புனிதத் திருநாளில் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

அரசாங்கக் கட்டுப்பாட்டு விலைக்கே மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் “பற்றறி” வாங்கும்பொழுது எவரெடி பற்றறிகள் என்று கேட்டு வாங்குங்கள்.

# நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141-143, ஸ்ரான்லி ரோட், போன்: 7016 யாழ்ப்பாணம்.

---

BOSCH SERVICE

எல்லோர்க்கும் எமது
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!
உங்களுக்குத் தேவையான

## பொஷ் & பேக்கின்ஸ்

(BOSCH) (PERKINS)

Perkins DIESELS

உதிரிப்பாகங்களுக்கு
வடபகுதி ஏகவிநியோகஸ்தர்களாகிய எங்களுடன்
தொடர்பு கொள்ளுங்கள்.

# சமுத்திரா ட்ரேட்ஸ் லிமிட்டட்

23/2 ஸ்ரான்லி வீதி— யாழ்ப்பாணம்.

கொழும்புக் கிளை:
18, ரேஜினி வீதி, கொழும்பு—6.
தொலைபேசி: 83755 தந்தி: ‘தியாகர்’

தொலைபேசி: 7236 தந்தி: ‘சமுத்திரா’

வல்வெட்டித்துறைக் கிளை:
யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் எமது அன்பு கலந்த

நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்கள் ஜவுளித் தேவைகளைப்
பூர்த்தி செய்துகொள்ள மறவாதீர்கள்!

**கணேசானந்தாஸ்**

(முட்டாசுக்கடைச் சந்தி)

208, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்



அன்பர்கள் - ஆதரவாளர்கள் அனைவர்க்கும்

எமது அன்புகலந்த

நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

**சிப்ஸைட்**

(வட இலங்கையின் புகழ்பெற்ற புடைவை மாளிகை)

186-188 கே. கே. எஸ் றேட் — யாழ்ப்பாணம்.



மாணவ -- மாணவிகளுக்கும்
மற்றும்
அன்பர்கள் - ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
நத்தார் — புத்தாண்டு
வாழ்த்துக்கள் !

**M. S. T.**

95/3, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்:

**M. S. S. T.**

49, பேஸ்லைன் றேட் -- கொழும்பு-8.



அன்பர்கள்-ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

**விக்னேஸ்வரா**

புடவை மாளிகை

பஸ்நிலையம் முன், யாழ்ப்பாணம்.



அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
நத்தார் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!


## நத்தார் சிறப்பிதழ்

# தேவன் பிறந்தான்

— எல். குணநாயகம் —

**கார்** காலம் வாடைக் காற்று வருத்தும் நள்ளிரவு; பெத்லகேம் ஊரருகேஉள்ள மலைச்சாரல், மலைச்சாரலிலே ஒரு மாட்டுத் தொழுவம். அங்கே-

இற்றைக்கு20 நூற்றுண்டுகளுக்கு முன்பே நடந்த நற்செய்தியை பின்வருமாறு வர்ணிக்கிறார் புனித லூக்காஸ். (2:7)

அந்நாளில் உலகமுழுமையும் மக்கள் தொகையைக் கணக்கிடும்படி செசார் அகுஸ்துசியிடமிருந்து கட்டளை பிறந்தது. முதலாவதான இக் கணக்கு சீரிய நாட்டைக் கிரேனியுஸ் ஆண்டகாலத்தில் எடுக்கப்பட்டது. அதன்படி அனைவரும் பெயரைப் பதிவு செய்யத்தத்தம் ஊருக்குச் சென்றனர் சூசையும்கர்ப்பவதியாயிருந்த மனைவிமரியாளோடு பெயரைப் பதிவு செய்யக் கலிலேயா நாட்டு நாசரேத்தூரை விட்டு யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்றதாவீதின் ஊருக்குச் சென்றார் ஏனெனில் அவர் தாவீதின் குலத்தவரும் குடும்பத்தவருமாக இருந்தார். அவர்கள் அங்கிருந்த பொழுது, மரியாளுக்குப் பேறுகாலம் நேரிட, அவள் தலைப்பேறான மகனை ஈன்றெடுத்துத் துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தினள் ஏனென்றால், சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

அதே பகுதியில் இடையர் வெட்டவெளியில் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடைக்குச் சாமக்காவல் காத்துக் கொண்டிருந்தனர் ஆண்டவருடைய தூதன் அவர்களுக்குத் தோன்ற விண்ணொளி அவர்களைச் சூழ்ந்து சுடர்ந்தது. மிகுந்த அச்சம் ஆட்கொண்டது. வானதூதன் அவர்களை நோக்கி, "அஞ்சாதீர்!" இதோ மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சி யூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன் ஏனெனில் இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா. குழந்தை ஒன்றைத் துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள். இதுவேஉங்களுக்கு அறிகுறியாகும் என்றார்

உடனே வானோர் படைத்திரள் அத்தூதனோடு சேர்த்து உன்னதங்களிலே கடவுளுக்குமகிமையும் உலகிலே அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதியும் ஆகுகஎன்று கடவுளைப் புகழ்ந்தது.

தூதர்கள் அவர்களை விட்டு வானகம் சென்றபின் இடையர்ஒருவரையொருவர் நோக்கி, 'வாருங்கள் பெத்லகேமுக்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்த இந் நிகழ்ச்சியைக் காண்போம்' என்று சொல்லிக் கொண்டு, விரைந்துசென்று மரியாளையும் சூசையையும் முன்னிட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டனர். கண்டபின்னர், அப்பாலனைப் பற்றித் தமக்குக்கூறப் பட்டதைப் பிறருக்கு அறிவித்தனர். கேட்ட யாவரும் தங்களுக்கு இடையர் கூறியது பற்றி வியப்படைந்தனர். மரியாளோ இந் நிகழ்ச்சிகளை எல்லாம் உள்ளத்தில் கொண்டு சிந்தித்து வந்தாள் இடையர் தாம் கண்டது கேட்டது எல்லாம் நினைத்துக் கடவுளின் மாட்சிமையைப் புகழ்ந்து கொண்டே சென்றனர்.

'உருவில்லான் உருவாகி
உலகில் ஒருமகனுதிப்பக்
கருவில்லாக் கருத்தாங்கிக்
கன்னித்தாயாயினையே'!

## இயேசுவும் விசுவாசமும்

கிறீஸ்தவமே விசுவாசத்தில் தங்கியிருக்கின்றது என்பதை இயேசு பலமுறையும் தனது சீஷர்களுக்கும் பொதுமக்களுக்கும் எடுத்துக்காட்டியிருக்கின்றார். விசுவாசத்தாலும் ஜெபத்தாலும் செய்யக்கூடாத காரியங்கள் ஒன்றும் இல்லை என்பதை இயேசு பல அற்புதங்களின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

இயேசு பெத்தானியாவுக்குத் தமது சீஷருடன் பிரயாணம் செய்துகொண்டிருந்தபொழுது (மார்க்கு அதி 11) பசியாயிருந்தார், அப்பொழுது ஒரு அத்திமரம் தென்பட்டது. ஆனால் அப்பொழுது அத்திப்பழக் காலமாய் இல்லாதபடியால் அதில் அத்திப்பழங்கள் இருக்கவில்லை. இயேசு உடனே மரத்தைப் பார்த்து இது முதல் ஒருவனும் உன்னிடத்தில் புசிக்கமாட்டான் என்று கூறிச் சென்றார். மறுநாள் அவர்கள் அவ்வழியேசென்றபொழுது அம்மரம் வேரோடு பட்டுப் போயிற்று. உடனே இயேசுவின் சிஷ்யர்களில் ஒருவனை பேதுரு நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்றே என்று ஆச்சரியப்பட்டான். இயேசு அவனுக்கு மறுமொழியாக, கடவுளிடத்தில் விசுவாசமாயிருங்கள். எவனாகிலும் இம் மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று கூறி, தான் கூறியபடியே நடக்கும் என்று விசுவாசித்தால் (நம்பினால்) அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குக் கூறுகிறேன். ஆகவே நீங்கள் ஜெபம்பண்ணும் பொழுது எவைகளைக் கேட்டுக் கொள்ளுவீர்களோ அவைகளைப் பெற்றுக்கொள்வீர்கள் என்று நம்புங்கள். அப்பொழுது, அவைகள் உங்களுக்கு உண்டாகும்" என்றார்.

-- ரஞ்சன்

# ஒளித்திருநாள் காட்டும்வழி

— இ. பேர்ணுட் —

**க**ர்த்தாதி கர்த்தர் கன்னிவயிற்றினின்றுபிறந்த தினம் நத்தார் தினம். நத்தார்த் திருநாளை ஒளியின் திருநாள் என்று கூறினாலும் பொருந்தும். 'நானே உலகின்ஒளி' என்றுரைத்தயேசு உதயமான தினம் நத்தார்.

உலக வாழ்க்கையிலே ஒளிதான் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஒளியில்லாவாழ்வு இருண்டவாழ்வு ஒளி மனித வாழ்க்வுக்குமிக அவசியம் வேண்டியது. இதனை இயற்கையே நன்கு உணர்த்துகிறது தண்ணொளி தந்து எம்மை மகிழ வைக்கும் வெண்மதி பயிர் இனங்களைப் பசுமையுடன் விளங்கச் செய்யும் பகலவன் ஒளி

சமய வாழ்வில் அச்சாணியாய் இருப்பது ஒளி எந்தச் சமயத்தை எடுத்தாலும் ஒளி தான் முக்கிய இடம் பெறுகிறது. மெழுகுவர்த்தி கற்பூரம் என்பனதம்மையே அழித்து ஒளி கொடுக்கின்றன, கத்தோலிக்க ஆலயங்களில் கிறீஸ்துவின் பிரசன்னத்தைக்காட்ட அடையாளமாக [illegible]விளக்கு ஒன்று [illegible]லும் பகலுமாக எரிந்து ஒளி கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஒளியாய் உதித்த இயேசு அன்பு, சமாதானம் என்பவற்றையே உலகிற்குக் கொண்டுவந்தார். அந்தஒளி இவ்வுலகில் பிரகாசிக்கத் தொடங்கி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் அன்பும் சமாதானமும் இவ்வுலகில் இன்னும் நிலைபெறவில்லை. மாருக சண்டையும் சமாதானமும் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றன. எப்போது எங்கே சண்டை மூளுமோ என்ற நிலையில் உலகம் சென்றுகொண்டிருக்கிறது. இதற்குக் காரணமாய் விளங்குவது யாது? அந்த ஒளியின் அன்பு, சமாதானம் என்பவற்றை உலகம் இன்னும் உணராதது தான். உலகு விழித்து அந்த ஒளியைக் காணவேண்டும். அமைதியின் அண்ணலான இயேசுவின் அன்பு வழியில் தான் அமைதியை அவனி அடையமுடியும்.

ஒளிஉதயமான இந்நாளில் அந்த ஒளியின் வழி எம்அனைவர்க்கும் வழிகாட்டுவதாக இந்த ஒளியாம் இயேசு அன்று பெத்லகேமில் உத[illegible]மானபோது வானில் தூத[illegible] 'உலகில் நல்மனதுள்ளவர்களுக்கு அமைதி' என்று பண்ணிசைத்தனர். நாம் ஒரு[illegible] அன்பு [illegible] அன்பும் நட்பு[illegible] எங்குள்ளதோ அங்கேதான் [illegible]

## இயேசு பொன்மொழி

வருந்திச் சுமை சுமப்போரே என்னிடம் வாருங்கள். நான் உங்களைத் தேற்றுவேன்.


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
நத்தார் - புத்தாண்டு வாழ்த்து
ஈஸ்வர் கோப்பறேசன்
அன்
**றேடியோனிக்**
(பிரபல றேடியோ உப-உறுப்பு
இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்)
18, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.



எல்லோர்க்கும் எமது
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!



கண்ணையும் — கருத்தையும்
கவரும்
தங்க - வைர நகைகளை
தெரிவுசெய்ய
சிறந்த ஸ்தாபனம்

**கே. என். எம்.**
**மீருன் சாஹிப்**

தங்கப்பவுண் நகைமாளிகை
கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.


## குடிதண்ணீர் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் கிழக்கில் சிறுபான்மைச் சமூகத்தவர் பாவிக்கும் இரு கிணறுகளில் சில விஷமிகளால் நச்சுத் திராவகம் ஊற்றப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதி சிறுபான்மைச் சமூகத்தவர்கள் குடிநீரின்றிமிகவும் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு உடனடியாக குடிநீர் வழங்கும்படி அரசாங்க அதிபர், கடற்படையினருக்கு உத்தரவிட்டிருந்தார். 5 நாட்களாகத் தொடர்ந்து குடிநீர் வழங்கிவந்த கடற்படையினர் நேற்றுவழங்கியது உப்பு நீராக இருந்தபடியால் சிறுபான்மை சமூகத்தவர் குடிக்க நீரின்றி கஷ்டப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் மகாசபை பொதுக் காரியதரிசி திரு. எஸ். ஜே. அன்ரனி தெரிவித்துள்ளார்.

அப்பகுதி சிறுபான்மை சமூகத்தவர் சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கு இது பற்றி புகார் செய்திருந்தனர். மகாசபை பொதுக் காரியதரிசி திரு. எஸ். ஜே. அன்ரனி, திரு. இராசையா ஆகியோர் அரசாங்க அதிபரிடம் முறையிட்டதன் பேரில், அவர்களுக்கு குடிநீர் வழங்கும்படி அவர்கடற்படையினருக்கு உத்தரவிட்டார். மாரிகாலமாதலால் அக்கிணறுகளை இறைக்கமுடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்று சிறுபான்மைத்தமிழர் மகாசபையினர் தெரிவித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
நத்தார் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

# சாரதாஸ்

புடவை மாளிகை

27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

தந்தி: யாழ்மெற்றல் தொலைபேசி எண்: 7049

# யாழ் உலோகத் தொழிற்சாலை

உறுதியும் உத்தரவாதமுமுள்ள

★ கும்பகோணம் குடம்
★ செம்பு
★ தாம்பாளம்
★ கிடாரம்
★ வங்காளம் சட்டி
★ இட்டலிச் சட்டி


ஆகியனவும்

வீட்டுப் பாவனைக்குரிய சகல யாழ் மார்க் அலுமினியப் பாத்திரங்களும் தயாரிப்பாளர்களும்
சில்லறை மொத்த விநியோகஸ்தர்களும்

கோயிலுக்குத் தேவையான திருவாசி, கொடித்தம்பம் ஆகியனவும் மற்றும் சகல சாமான்களும் ஒடடுக்கு செய்துகொடுக்கப்படும்.

தொழிற்சாலை & கந்தோர்
250—254, கே. கே. எஸ். வீதி. — யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!




நீடித்து
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாதது
யூ ஆசா
பற்றறிகளை

வட மாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

## இயேசு பொன்மொழி

வருந்திச்சுமை சுமப்போரே என்னிடம் வாருங்கள், நான் உங்களைத் தேற்றுவேன்.

0

சிறுவரை நம்மிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடைசெய்யாதேயுங்கள். மோட்ச ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது

0

எதை உண்போம் எதைஉடுப்போம் என்று கவலைப்படாதீர்கள். இவை எல்லாம் உங்கள்பிதா உங்களுக்கு அளிப்பார்.

0

ஒருவரை ஒருவர் அன்புசெய்தால் என்சீடராயிருப்பீர்கள்.

0

உன்கண்ணிலிருக்கும் உத்திரத்தைத் தள்ளிவிடு பின்சகோதரன்கண்ணிலிருக்கும் துரும்பைஎடுக்கப் பார்.

0

உன்னிடம் கேட்கிறவனுக்குக்கொடு. உன்னுடையவைகளைப் பறித்துக் கொள்ளுகிறவனிடம் அவற்றைத் திரும்பக்கேளாதே.

0

சத்துராதிகளை நேசியுங்கள்; நன்மைசெய்யுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர் வதியுங்கள் ஒரு கன்னத்தில் அடிக்கிறவனுக்கு மறுகன்னத்தையும் காட்டு.

—(இ. பே)

மாணபோது வானில் தூதர் 'உலகில் நல்மனதுள்ளவர்களுக்கு அமைதி' என்று பண்ணிசைத்தனர். நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்வோம், அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கேதான் இறைவன் இருக்கின்றார். 'உன்னைப்போல் உன் அயலவனைநேசி' என்பன போன் இயேசுவின் போதனைகள் எல்லாம் உலகில் வாழ வேண்டுமாயின் அந்த ஒளியின் வழியே நாம் செல்ல வேண்டும். அதற்கு இந்நாளில் ஒளியாம் இறைவன் எமக்கு உதவவேண்டுமென அவனை வேண்டிக்கொள்வோம்.

## மீண்டும் வேலை

பருத்தித்துறை, வியாகரவெட்டியில் சிலகாலத்திற்குமுன் நடைபெற்ற கலவரம் காரணமாக வேலையிழந்திருந்த கட்டைவேலிக் கூட்டுறவு யூனியனைச் சேர்ந்த ஒன்பது தொழிலாளிகள் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# செ. காசிப்பிள்ளை அன் கோ.

(பிரபல புடவை வியாபாரிகள்)
82, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.
கிளை: சி கே பி 74/8 பெரியகடை, யாழ்ப்பாணம்.

தங்கப்பவுண் நகைமாளிகை
கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.

புதிய
றெக்கோட்டுகளுக்கும்
உலகில் புகழ் பெற்ற



றேடியோக்கள்
வாங்கவோ விற்கவோ அல்லது திருத்தவோ
யாழ்ப்பாணத்தில் முதல்தர ஸ்தாபனம்

# எஸ். சுலைமான்கண்டு

அன் பிறதர்
5—7, மொம்சாக் கட்டிடம்
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 265 தந்தி: 'ஜஹான்'

# பார்டன் மேதர்

சகல விதமான கொண்டாட்டங்களுக்கும் நினைவுகூரவேண்டிய ஒரு பெயர்.
நாற்காலிகள்-மேசைகள்-டீப்போய்கள்-ளொஸ்கள்
கோப்பைகள்-ஐஸ்கிறீம் கோப்பைகள்
முதலியவற்றை எல்லாம் எங்களிடம்
வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
உடனடியாக திறமையான சேவை
110, பிரதானவீதி யாழ்ப்பாணம்

அக்கொளுகளை இறைக்கமுடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்று சிறுபான்மைத்தமிழர் மகாசபையினர் தெரிவித்தனர்.

அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
உள்ளூர் மின்தறியில் தயாரிக்கப்பட்ட தரமான, நேர்த்தியான
★ சாரிகள் ★ ரவுக்கைத்துணிகள் ★ பாவாடைத்துணிகள் ★ பட்டுவேட்டி
★ சால்வைகள் ★ காற்சட்டைத்துணிகள் தயாரிப்பவர்கள்

# வலிமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்

சங்கானை
தொலைபேசி: மானிப்பாய்-525

எல்லோருக்கும் எமது உளங்கனிந்த நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்

# நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ்

(பிரபல இசைக்கருவி விற்பனையாளர்களும், பழுது பார்ப்பவர்களும்)
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# ஞானம்ஸ் ஸ்ருடியோ

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7067
ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு: உன்னுடையதை எடுத்துக்கொள்கிறவனிடத்தில் அதை திருப்பிக் கேளாதே. மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

— இயேசுநாதர்.


# ஈழநாடு

Eelanadu Jaffna Daily

Telegram: "EELANADU" Jaffna

Post Box: 49, Jaffna: Telephone: 889

[illegible] மார்கழி மாதம் 10-ம் திகதி (25-12-70)


## யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பது பற்றி, தபாலமைச்சர் திரு குமாரசூரியரின் தலைமையில் ஒரு குழு ஆலோசனை செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சிம்மாசனப் பிரசங்கத்திலே வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலுமாக மூன்று புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அரசாங்கம் காரியங்கள் செய்து, முதலில் வடக்கே யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ நடவடிக்கை எடுத்திருப்பது மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்கதாகும்.

அரசாங்கத்துக்கு இன்று தலையிடி அளிக்கும் பல பிரச்னைகளில், பல்கலைக்கழக விஷயமும் ஒன்று. அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேரத் தகுதி பெறுகின்றார்கள் ஆனால் அவர்களைச் சேர்த்துக் கொள்ள போதிய இடமில்லை. இதனால் தரப்படுத்தல் என்ற ஏதேதோ முறைகளைக் கையாள முற்பட வேண்டியுள்ளது. ஏற்கனவே அறிவித்தபடி புதிய பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்படுமாயின், இப்பிரச்னை வெகுவாகக் குறையக்கூடும்.

மேலும் வடமாகாணத்தில் தேர்ச்சிபெறும் மாணவமாணவிகளில் பலர் கொழும்பு, பேராதனை முதலிய இடங்களுக்குச் சென்று வசித்து கல்வி கற்பதில் பல சங்கடங்கள் உள்ளன. சிறப்பாக எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகள் உணவுக்கும் இருக்கைக்கும் படும் அவதிகளை விளக்கத் தேவையில்லை. வடமாகாணத்திலே ஒரு பல்கலைக்கழகங்களுக்கும், இலங்கைப் பல்கலைக்கழகம் என்றே பெயர் இருப்பது போல் யாழ்ப்பாணத்திலும் பெயர் இருப்பதாயின், இவற்றினிடையே உயர்வு தாழ்வுகள் இன்றி ஒருவித சமத்துவம் நிலவுவதாக இருக்கும். ஆகவே பெயர் விஷயமாகச் செய்துள்ள முடிவு ஒப்புக்கொள்ளத் தக்கதேயாகும்.

தமிழும் சிங்களமுமே போதனு மொழிகளாக இருக்குமென்றும், ஏற்கனவே நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன், தேசிய அடிப்படையிலே ஒத்துழைக்கும் முறையில் மாணவர்களைச் சேர்க்கவேண்டும். எல்லா வசதிகளையும் பொதுவாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென்றும் ஆலோசனைக் குழு ஒருமனதாகத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. தாய்மொழி மூலம் கற்பது ஒரு விதத்தில் நல்லதே. ஆனால் தீவின் எந்தப் பகுதிக்கும் சென்று வேலை பார்க்க அது தடையாக இருக்கப்படாது. மூன்று மொழிகளையும் கற்க மாணவர்களுக்கு வாய்ப்பிருப்பின், இலங்கையில் மட்டுமன்றி, உலகில் பல நாடுகளிலும் சென்று பணியாற்ற அவர்களுக்கு வாய்ப்பிருக்கும். இவ் விஷயத்தில் குறுகிய எண்ணங்களை விட்டு மாணவர்களின் எதிர்கால நன்மைக்கேற்ப, அவர்களதுகருத்தை அறிந்து அதற்கான முறையில் ஒழுங்குசெய்வதே விவேகம். அண்டையிலுள்ள தமிழகத்தில் பல்கலைக்கழக போதனு மொழி விஷயமாகப் பெரிய கிளர்ச்சி நடப்பது கவனிக்கத்தக்கது.

இவ்வித கருத்துவேற்றுமைகள் என்னஇருப்பினும் வடக்கே ஒரு பல்கலைக்...

கைதிகள் பட்டியல் கொடுத்தது

# வடவியட்னமியரின் பிரசார முயற்சியாம்

## யு.எஸ்.ராஜாங்க அமைச்சர்கூற்று

நியூயோர்க், டிச.24 அமெரிக்க போர்க்கைதிகளின் பெயர் பட்டியல் ஒன்றினை வடவியட்னும் வெளியிட்டிருப்பது வெறும் பிரசாரத் தந்திரம்என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸ் வர்ணித்திருக்கிறார்.

1968ம் ஆண்டு அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்தியபோது ஏற்பட்ட மறைமுக உடன்படிக்கையை வடவியட்னும் மீறிவருவதாகக் குற்றஞ் சாட்டிய திரு. ரோஜர்ஸ் இது பெரும் எதிர் விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என்று எச்சரித்தார்.

கம்யூனிஸ்ட் சீனவை ஐ.நா சபையில் அனுமதிப்பது பற்றிய பிரச்னையில் அமெரிக்காவின் எதிர்காலக் கொள்கை பற்றி ஆராயப் படுவதாகத் தெரிவித்த அவர் எந்தக் காரணத்தைக் கொண்டும் தாய்லாந்தை ஐ.நா விலிருந்து வெளியேற்றும் முயற்சியை அமெரிக்கா ஆதரிக்காது என்றார்.

சோவியத் யூனியனுடனு உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது என்றும் திரு. ரோஜர்ஸ் குறிப்பிட்டார். மேற்காஸிய அமைதியைக் காப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடும் என்றும், சோவியத்யூனியனுடன் சேர்ந்து அமைதிக்காக்கும் படையில் பணிபுரிவது சாத்தியமில்லை யென்றும் திரு. ரோஜர்ஸ் குறிப்பிட்டார்.

## அமோனியம் குளோரைட் பரந்தனில் உற்பத்தி

யாழ்ப்பாணம், வெள்ளி வெளிநாட்டிலிருந்து இதுவரை காலமும் இறக்குமதி செய்யப்பட்டுவந்த 'அமோனியம் குளோறைட்' முதற் தடவையாக பரந்தன் ரசாயன தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்பட்டுள்ளது.

குளிரூட்டும் சாதனத்திற்கு முக்கியமாகத் தேவைப்படும் அமோனியம் குளோரைட், இங்கு உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் வெளிநாட்டு இறக்குமதி கட்டுப்படுத்தப்படலாமெனக் கூறப்படுகிறது.

பரந்தன் ரசாயன தொழிற்சாலையில் வருடமொன்றுக்குச் சுமார் 500 தொன் வரை அமோனியம் குளோறைட்டை உற்பத்தி செய்யலாமென்றும் கூறப்படுகிறது. (குவிம)

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 10-ம் திகதி

[25-12-70]

மேஷம்- எதையும் ஏற்று நடத்தக்கூடிய மனத்திடம் ஏற்படும். குடும்பத்தில் தலைமை ஸ்தானம் கிடைக்கும்.

ரிஷபம்- போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும், ஆணவப்போக்கினுல் சந்தர்ப்பம் நழுவவிடப் படலாம்

மிதுனம்- இன்று முன்னணியில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வழங்கும்சந்தர்ப்பம் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை மேலோங்கும்.

கடகம்- வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்...

## பெத்லகேமில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

### ஆயிரக்கணக்கான யாத்திரிகர்வருகை

டெல் அவிவ், டிச. 24 ஏசுநாதர் அவதரித்த பெத்லஹேம் நகரில் வெளிநாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து குழுமியிருக்கிறார்கள்

இப்புனித நகரைத் தரிசிப்பதற்காக வரும் வெளிநாட்டு யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பளிக்கும் பொருட்டு இந்நகருக்குச் செல்லும் வீதிகள் யாவற்றையும் இஸ்ரேல் அதிகாரிகள் மூடியிருக்கிறார்கள்.

1967-ம் ஆண்டு அரபு-இஸ்ரேல் யுத்தத்தின் பின் முதல் தடவையாக பெத்லஹேமிற்கு எகிப்து, லெபனுன் போன்ற நாடுகளிலிருந்தும் கிறிஸ்தவ யாத்ரீகர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விமரிசனம்

### ஏசுநாதரும் பாப்பரசர் விஜயமும்

...ருத்தமான சமயத்தில் பொருத்தமான... இதுமட்டுமா? ஏசுநாதர் படம்! எவ்வளவு அருமையாக பக்தி பூர்வமாகத்...

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனத்தார் ,மகாவித்வான்' பட்டம் அளித்திருக்கிறார்கள்.

சமீபத்தில் அங்கு நடைபெற்ற குருபூசை விழாவின் போது, ஈழத்தைச் சேர்ந்த 14 பேர்களுக்கு குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பராமச்சாரிய சுவாமிகள் பட்டங்கள் வழங்கி கௌரவித்திருப்பதை அறிய மகிழ்ச்சியாக இருந்தது. மேலும் பட்டங்கள் பெற்றவர் விவரம் வருமாறு:

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி வே. க. கந்தசாமி— சிவநெறிப் புரவலர்.

மில்க் வைற் முதலாளி க. கனகராசா — சிவதர்ம வள்ளல்.

கோப்பாய் சோ. சுப்பிரமணிய குருக்கள் — சித்தாந்தபானு

நயினை ஐ. கைலாசநாத குருக்கள் — சிவஞானபாஸ்கரர்.

கொழும்பு, விவேகானந்த சபை காரியதரிசி மு சிவராசா — சித்தாந்த சிரோமணி.

மட்டக்களப்பு இ. குழந்தைவேலு — பண்ணிசை வேந்தர்.

கொழும்பு ஆர். முத்துசாமி ரெட்டியார் — சன்மார்க்கசாது.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி— சித்தாந்த ஞானகரம்.

கொக்குவில் புலவர் த. குமாரசாமிபிள்ளை — பெருஞ்சொல்விளக்கனர்.

புங்குடுதீவு வித்வான் பொன். கனகராசா — சித்தாந்தசிகாமணி.

வைத்தியர் சி. கணபதிப்பிள்ளை (புங்குடுதீவு) — சித்தாந்த ரத்னகரம்.

யாழ்ப்பாணம் செல்வி சரோசனி தனபாலசிங்கம் — பண்ணிசை அரசி.

புங்குடுதீவு சரவணமுத்து சுவாமி — சிவனடித்தொண்டர்.

இப்பட்டங்கள் பெற்றவர்களுக்கு திருக்கேதீச்சரத்தில் ஜனவரியில் நடைபெறும் திருவாசக மகாநாட்டிலே பட்டமளிப்பு விழா நடைபெறுமென அறிகிறேன்.

இம்முறை திருக்கேதீச்சரத்தில் (ஈழத்திருப் பெருந்துறை) நடைபெறும் திருவாசக மகாநாட்டுக்கு திருமயிலை திருமதி காஞ்சனமாலை அம்மையாரும், திருப்பனந்தாள் ஆதீன ஓதுவார் முத்துக்கந்தசாமியும் (திருச்சி) வர இருப்பதாகவும் அவர்களுக்கு விசா அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## ஜயாறன் எழுதுவது

...கழகத்தைச் சேர்ந்த 60பேர்கள் ஈழத்துக்கு வந்து திருக்கேதீச்சரத்தைப் பார்த்துவிட்டு தாங்கள் 274 ஸ்தலங்களை இதுவரை தரிசித்துள்ளதாகவும், ஆனால் திருக்கேதீச்சரத்தைப் போல் எங்கும் கண்டதில்லை என்றும் தெரிவித்தனராம். இந்தப் பாடல் பெற்றத் தலத்துக்கு தமிழகத்திலிருந்து இனி அதிகமானவர்கள் வந்து தரிசிக்க ஆவலுடன் முன்வரக்கூடும்.

0 0 0

தமிழகத்திலிருந்து பம்பாய், டில்லி முதலிய நகரங்களுக்கு விடுமுறைக்குச் செல்வதைவிட பக்கத்திலுள்ள இலங்கைக்கு வரவே பலரும் மிக ஆவலுள்ளவர்களாகவுள்ளனராம் பிரயாணச் செலவும் தூரமும் குறைவானதுடன், இராமாயண முக்கியம் வாய்ந்த இலங்கையைப் பார்க்கவும் கதிர்காமம், திருக்கேதீச்சரம், திருக்கோணமலை, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களைத் தரிசிக்கவும் தென்னகத்தில் லட்சக்கணக்கானவர் ஆவலுடன் இருப்பதாயும், இந்திய அரசாங்கம் அவர்களுக்குத் தடையின்றி தலா 15 பவுண் செலாவணி அளிப்பதாயும், அவர்களை இங்குவர அனுமதிப்பதால், இலங்கைக்கு யாத்திரிகர் மூலம் பெரும் தொகை செலாவணி ஸ்டர்லிங் பவுண் கிடைக்குமென்றும், சென்னையிலிருந்து இங்கு சமீபத்தில் வந்திருந்தவிஷயமறிந்த அன்பர் தெரிவித்தார்.

வட இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கே இலங்கைக்குவர விசா அளிப்பதாயும், தமிழகத்திலிருந்து ஏற்கெனவே இங்கு ஒருமுறைவந்தவர்களுக்கு விஸா மறுப்பதாகவும் தெரிகிறது. மேலும் இந்தியாவிலிருந்தும் சிறப்பாகத் தமிழகத்திலிருந்தும் இங்குவரும் யாத்திரிகர்களுக்கு, நவீன ஓட்டல் வசதிகள் தேவையில்லை. சாதாரண உணவு விடுதிகளே போதும். இலங்கை அதிகாரிகள் தமிழக யாத்திரிகர் விஷயமாக அதிக கடுமை காட்டாமல் இருந்தால் யாத்திரிகர்மூலம் பெரும் பணம் கிடைக்கமுடியுமென்றும் அந்த அன்பர் கூறினார். ஆனால் இங்கு அரசாங்கத்துக்கு அவ்வித மனமாற்றம் ஏற்படுமா?

ஆஸியநாடுகளில்

# இலங்கை துரிதமாக முன்னேறுகிறது

## ஐ. நா. நிபுணர் கருத்து

கோட்டை, வியாழன் ஆசியாவில் உள்ள மற்றய நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கை மிகதுரிதமாகமுன்னேறிவரும் ஒரு நாடாக விளங்குகிறது. பொருளாதார அபிவிருத்திக்காகத் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களினுல் இலங்கை மேலும் செழிப்புறும்.

தற்போது இலங்கையில் தங்கியுள்ள ஐ. நா. கட்டட ஆராய்ச்சி நிபுணரான திரு, கிளவுன்பிளக்பேட்டியொன்றின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## "குளத்திற்கு தண்ணீர் தருக"

முசலி, வியா தற்பொழுது முசலிதெற்கு கிராமச்சபை எல்லைக்குள் இருக்கும் கொண்டச்சிக் குளம், கொக்குப்படையான் குளம், இலக்கரிக்குளம், கூளாங்குளம், தம்பட்டன் முதலிகட்டுக்குளம், பெரிய நொச்சிக்குளம், சின்ன நொச்சிக்குளம் ஆகிய குளங்களில் தண்ணீர் தற்பொழுது இல்லையென்றும் அவற்றுக்குத்தண்ணீர் வெகு விரைவில் அளிக்கவேண்டு...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உணர்ச்சி... ருடும்பனர்கள் சேர்ந்த மாணவ மாணவிகள் உண வுக்கும் இருக்கைக்கும் படும் அவதியை விளக்கத் தேவையில்லை. வடமாகா ணத்திலே ஒரு பல்கலைக் கழகத்தை பல வருடங் களுக்கு முன்பே அரசாங்கம் திருப்பின் இந்தப் பிரச்னை தீர்ந்திருக்கும் இல்லை. அரசாங் கத்தின் அசிரத்தையும், அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட வேறுபாடுகளையும் அங்கு பல்கலைக்கழகம் இது வரை ஏற்படமுடியாது போயிற்று. இப் பெருங் குறை இனியும் தவக்க மின்றி நிறைவேறவேண்டு மென்பதில் வடமாகாண மக்கள் மட்டுமன்றி நாட்டில் உள்ள பொதுமக்கள் அனை வரும் அக்கறைகொண்டிருக் கிறார்கள்.

''இலங்கைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்'' ஏற்கெனவே கொழும்பிலும் பேராதனையிலுமுள்ள பல் கலைக்கழகங்களைப் போலவே மொழி விஷயமாகப் பெரிய கிளர்ச்சி நடப்பது கவலைக் கத்தக்கது.

இவ்வித கருத்துவேற்று மைகள் என்னஇருப்பினும் வடக்கே ஒரு பல்கலைக் கழகத்தை இனியும் தாமத மின்றி அமைப்பதில் தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப் பும் ஆதரவும் கிடைக்கு மென்றே கொள்ளலாம். வடக்கிலே இடம், பொருள், ஏவல் எல்லாம் உண்டு. பரமேஸ்வராக் கல்லூரியில் புதிய பல்கலைக்கழகத்தை அமைப்பதாயின், அது காலஞ்சென்ற பெரியார் சேர் பொன்னம்பலம் இராம நாதனின் கனவை நன வாக்கி, அவரை கௌரவிப்ப தாகவுமிருக்கும். பேச்சுடன் இதை நிறுத்திவிடாமல், வருகிற ஆண்டிலேயே இதை செயல்படுத்த அரசாங்கம் ஆவனசெய்யுமென்றே நம்பு வோம்.

# மேலதிக நெல்லை அரசாங்கம் எடுக்குமா?

## உயர் அதிகாரி விளக்கம்

அராலி, வியாழன்

''ஒவ்வொரு காலபோக நெல் விளைவு காலத்திலும் டிசம்பர் மாதம் முடிவதற் குள் உத்தேச நெல் விளைவு பற்றிய விபரப்புள்ளிகளை அரசாங்கத்திற்கு மூன்று பிரதிகளில் தயாரித்து அனுப்புதல் வேண்டுமென அரசினர் தெற்கு - கிழக்கு பயிர்ச்செய்கைக்குழு மத் தொழிற்பகுதி ஆணையாள ரால் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டியலில் ஒரு வருக்கு எத்தனை ஏக்கர்நெல் வயல் உண்டென்றும் அந்த வயலில் எதிர்பார்க்கும் அறுவடை பற்றியும் தகவல் கோரப்பட்டுள்ளது. பட்டி யல் சமர்ப்பிக்கும் விவசாயி யின் தேவைக்காக 10 புசல் நெல்லும் விதைப்பதற்காக ஏக்கருக்கு இரண்டு புசல் நெல்லும் நீங்கலாக எஞ்சிய நெல் எத்தனை புசலென்ற விபரங்களும் காட்டப்படல் வேண்டுமாம்.

''எஞ்சிய நெல் கட்டாய மாக அரசாங்கத்தால் உத் தரவாதவிலைத்திட்டத்தின் கீழ் எடுக்கப்படுமா'' என்று கமநலச்சேவை உயர் அதி காரி ஒருவரைக் கேட்ட போது, 'இந்தப்புதிய' விபரம் பொருள் பட்டியல்பற்றி எந்த ஒருவிவசாயியும் கல வரமடைய வேண்டிய தில்லை என்றுகூறினர். அவர் மேலும் கூறியதாவது: இது ஒரு புள்ளிவிபரம் காட்டும் பத்திரம் மட்டுமே. இந்தப் பத்திரத்திலுள்ள விபரங் களைக்காட்டி ஒருவிவசாயி தன்னிடமுள்ள மேலதிக நெல்லை அரசாங்கத்திற்கு விற்பனை செய்யவேண்டு மென்று வற்புறுத்தப்பட மாட்டார். அரசாங்கம் நாட்டின் சகல பகுதிகளி லும் நெல் கொள்வனவு நிலையங்கள் அமைத்துள் ளது. இந்த நிலையங்களில் கொள்வனவு செய்யக்கூடிய நெல்லின் அளவையும் அதற் காக அங்கு தேவைப்படும் பணம், சாக்குகள் ஏற்றிச் செல்லும் வாகனவசதிகள் பற்றிய தகவல்களை முன் கூட்டியேஅறிவதற்கு இவ்விபரங் களைச் சேகரிக்கப்படுகின்றன.''

## பொன்னம்பெருமா நெல்லியடிக்கு வருகிறர்

பருத்தித்துறை,வியா

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கும் டாக்டர் சிறில் பொன்னம் பெருமா அடுத்தமாதம் 3ம் திகதி காலை நெல்லியடி மத் திய மகாவித்தியாலயத்தில் நீரியல், உயிரியல் சம்பந்தமா வில் உரைநிகழ்த்தவிருக்கி றார். அன்றைய மதிய போசன விருந்தில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மிதுனம்- இன்று முன் னணியில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வழங்குஞ்சந்தர்ப்பம் ஏற்படலாம். தெய்வ நம் பிக்கை மேலோங்கும்.

கடகம்- வெற்றிப் பாதை யில் வீறுநடை போடுவீர் கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

சிம்மம்- புதுமையான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங் களுக்கும் இடமுண்டு.

கன்னி- புயல் மோதும் மனதுடன் புறப்படுவீர்கள். இன்று சிறிய விஷயத்திற் கும் அதிக கோபம் ஏற்பட லாம்.

துலாம்- அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்திலிருந்து தாக்குதல் உருவாகும்.

விருட்சிகம்- திடீர் திருப் பம் வாழ்க்கையை வளப் படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமை யும்.

தனுசு- வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தர லாம். வேண்டாத உறவு களைத் துண்டித்தால் நன்று.

மகரம்- உறவுகள் பலப் படும். உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கு வழி பிறக்கும். உவப்பானதினம்.

கும்பம்- தெளிந்தமனம் தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு.

மீனம்- தூரத்துச் செய்தி யொன்று துயரத்தில் ஆழ்த் தும். பிணிக்கு இடம் கொடாது உடல்நலத்தைப் பேணவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## பாப்பரசர் விஜயமும்

பொருத்தமான சம யத்தில் பொருத்தமான காரியங்களைச் செய்து சந் தர்ப்பத்தைத் தமக்கும் பிற ருக்கும் பயன்படச் செய்து கொள்வதென்பது தனித்தி றமை எஸ்.ரி.ஆர். பிலிம் சாருக்கு இத்திறமைநிறைய உண்டு என்பதற்கு நத்தார் பண்டிகைச் சமயத்தில் 'ஏசு நாதர்' படத்தையும் அதனு டன் 6-வதுசின்னப்பபாப்பர சரின் இலங்கை விஜயநிகழ் ச்சியையும் யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் திரை யிட்டிருப்பதே தக்கசான்று.

6-வது சின்னப்பபாப்பர சர் இலங்கையில் அதுவும் கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் ஒரு சில மணி நேரமே தங்கியிருந்தாலும் அவரைத் தரிசிப்பதற்காக லட்சக்கணக்கான மக்கள் அங்கு திரண்டனர். அங்கு சென்றவர்கள் பாக்கிய வான்கள்; நமக்கு அது கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டோர் ஏராளம். ஆனல் அங்குசென்றவர்க ளில் கூட பாப்பரசரை அரு கில் நின்று தரிசிக்கும் பாக் கியம் ஒரு சிலருக்குத்தான் கிடைத்திருக்க முடியும்.

கட்டுநாயக்காவுக்குச் சென்றவர்கள் பெற்றிருக்க முடியாதபாக்கியம் ராஜா தியேட்டருக்கு இப்போது செல்பவர்களுக்குக் கிடைக் கும். தமிழில் விளக்கம் கொடுக்கப்படுகிறது பாப்ப ரசரை அருகே நின்றுபார்ப் பது போலிருக்கிறது.

இதுமட்டுமா? ஏசுநாதர் படம்! எவ்வளவு அருமை யாக பக்தி பூர்வமாகத் பவ்யமாக தயா ரித்திருக்கிருர்கள், வரலாற் ருேடு ஒட்டியதாக, காலப் பிறழ்வு இல்லாமல் நடனம், குதிரை ஓட்டம் வாட்சண்டை முதலிய கவர் ச்சி அம்சங்களும் இடம் பெறக்கூடியதாகத் தயாரி த்து நல்ல வசனங்களுடனும் இனிமையான பாடல்களுட னும் வெளியிட்டிருக்கிருர் கள். பிரேம் நஸீர், எல் ஆர் விஜயலட்சுமி ராஜ சுலோசன இப்படித் தமிழ் ரசிகர்கள் தெரிந்த நல்ல நடிக நடிகையர் சிறப்பாக நடித்து தெய்வீகச் சூழலில் நம்மையெல்லாம் மெய்மறக் கச்செய்கிருர்கள்.

எல்லோருக்கும் கிடைத் துள்ள நல்வாய்ப்பை இழந்துவிடாதீர்கள்.

—திரைவண்டு

## தவறிவிட்டது

சுமார் 300 ரூபாயுடன் கிபேர்ஸ், நீர்கொழும்பு- கொழும்பு சீசன் டிக்கட்டு டன் யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று தவறிவிட்டது. கண்டெடு த்து ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங் கப்படும். தொடர்பு கொள்க சேவியர், மே/பா. எல். ஏ. யோசேப், மாத கல். 2168

# அவனுரைத்த சமத்துவம்

- வ. மகாலிங்கம -

அருள்கூரு முயர்தாயாம் அன்னைமரி சுதனக அவனிசேர்ந்தே
மருள்சூழு புவ்வாழ்வில் மங்காத வொளிவீசி மகிழ்வு மீந்தான்
இருணீக்கி யிதயமெலா மின்பவொளி தனையீந்து இனம் வாழ்ந்துய்ய
குருநாத னேசுமுனி குவலயத்திற் தன்னுயிரைச் சிலுவைக்கீந்தான்.

குன்றன்ன கொள்கையொடு குலையாத கோட்பாட்டுக் குவவுத்தோளும்
பொன்ருத வுளவலியும் பொதுநோக்கும் புன்மை யிலாப்புனிதநாவும்
ஒன்ருத தெவ்வரொடு உவந்தேத்தும் நீர்மையரும் உருகுநாதன்
மன்றத்துத்தலை தூக்கி மன்குலத்தின் மாண்பினுக்காய் மாய்ந்த போதன்

மூடமறியைப் புறத்தினிலே மூதறிவானுயரேசு முயங்கித் தூக்கி
நடந்துபல குன்றேறி நல்லாயனெனப் புவியில் நாமம் பெற்ருேன்
நடமாடு மாந்தரே நாம்கண்ட விறையென்ற மூலர்வாக்கை
படமாடுந் தெய்வமாய்ப் பாரறியச் செய்திட்ட பகவானன்ருே.

தத்துவத்தின் தலையாய தன்மையெலாந் தாங்குமுயர் தரத்தின் மிக்க
கொத்தனவே குவலயத்தார் கொண்டாடு மருள்ஞானக் கற்பனைகள்
பத்தெமக்குக் குருநாதப் பண்பாளன் பயந்து மிந்தப்பாரில் நாமும்
இத்தரையைப் பேரின்ப வீடாக்க இயலாது இருக்கின்ருேமே.

ஏசுபிரா னுயர்போத மேட்டினிலே யிருப்பதனுலின்ப முண்டோ
மாசகலு மவனெறியை மக்கள்குல முயர்வடைய மாற்றி வாழ்வில்
நாசமெனுந் தீண்டாமை நாயதனைப் போராடி நாளுந் நாளும்
ஆசனுநல் அகிலத்தே அவனுரைத்த சமத்துவத்தை யாக்கல்வேண்டும்.

மாலை அம்மையாரும், திருப் பனந்தாள் ஆதீன ஓதுவார் முத்து கந்தசாமியும் (திருச்சி) வர இருப்பதாக வும் அவர்களுக்கு விசா அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

அங்கு திருவாசக மகா நாடு ஜனவரி 7, 8 9 திகதி களில் நடைபெறுமென்றும், 1 முதல் 10-ந் திகதி வரை சதுை நாட்களென்றும், 7-ம் நாள் சிவபூசை குருநாளும் பட்டமளிப்பு விழாவும் நடைபெறுமென்றும் தெரிய வருகிறது.

சமீபத்தில் திருச்சி மௌனகுரு வழிபாட்டுக்

## காமன்வெல்த் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்தோம். நாம் சென்ற இடமெல்லாம், கைத் தொழில் நகரங்களிலும் சரி, கமங்களிலும் சரி, நாம் சந் தித்த மக்களிடையே புது முகங்களைக் காண நேர்ந்த போது எமது நாடுகள் மத் தியிலுள்ள நெருங்கிய தொடர்பு வருடாந்தம் புதுப்பிக்கப்பட்டு வருகி றது என்பதே எனக்கு நினை வுக்கு வந்தது' என்று மகா ராணியார் இச் செய்தியில் கூறியுள்ளார்.

### சாம்ராஜ்ய விளையாட்டுக்கள்

'இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் நடைபெற்ற சாம் ராஜ்ய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்று வதற்காக உலகடங்கிலுமி ருந்து 42 நாடுகளைச் சேர் ந்த பிரதிநிதிகள் ஒன்று கூடினர்கள். விளையாட்டுத் துறை இவர்கள் அனைவரை யும் ஸ்கொட்லாந்தில் ஒன்று சேர்த்து. இவ் விளையாட்டு வீரர்களுக்கு எடின்பரோ நகரிலுள்ள எமது இல்லத் தில் விருந்தளித்து மகிழ்வித் தோம்.

பொதுவான வரலாற்றின் அடிப்படையிலும் அன்பின் வாயிலாகவும் சுதந்திர மடைந்த நாடுகள் முன்பு ஒருபொழுதாவது இம் மாதிரியாககூட்டாக வாழ்ந் தது இல்லை.

'எமது கிறிஸ்மஸ் செய்தி யின் சாரம்சம் இதுதான்: ஒருவர் ஒருவரைப் பற்றி அக்கறை கொள்ளப்பழகிக்கொள்ளுங் கள். அயலார் உங்களை எவ் விதம் நடத்த வேண்டும் என்று கருதுகிறீர்களோ அவ்விதமே உங்களது அய லாரையும் நடத்துங்கள். பூமியிலுள்ள சகல உயிர் களினதும் எதிர்காலத்தில் அக்கறை காட்டுங்கள் இந்த ஆன்மீக விஷயங்கள்தான் உலோகாயுத நன்மைகளை விட முக்கியமானதும், நிரந் தரமானதுமாகும்' என்று மகாராணியார் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

செழிப்புறும்.

தற்போது இலங்கையில் தங்கியுள்ள ஐ. நா. கட்டிட ஆராய்ச்சி புணரான திரு, கிளவுன்பிளக்பேட்டியொன் றின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐ. நா.நிறுவன ஆதரவில் நடைபெறவிருக்கும் கட்டிட ஆராய்ச்சி சம்பந்தமான இரண்டாவது கருத்தரங் கொன்றை நடத்துவது சம் பந்தமான சாத்தியக் கூறு கள் குறித்து ஆராய இங்கு வந்துள்ளார்.

திரு பிளக் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது: கட்டிட ஆய்வு சம்பந்தமான ஐ. நா. நிறுவனத்தின் கருத் தரங்குகள் கடந்த ஆண்டு களில் இந்தியா, பர்மா, ஐக்கிய அரபு குடியரசு இலங்கை ஆகியஇடங்களில் நடைபெற்றன. இரண்டா வது தடவையும் இக்கருத் தரங்கை நடாத்துவது குறி த்து மேற்படி நிபுணர்அராய் ந்து வருகிறர்.

— —

மாதமொன்றுக்கு

## $2\frac{1}{2}$ லட்சம் சிலேட்டுகள் தேவையாம்

கோட்டை, வியா

மாதமொன்றுக்கு 25,000 சிலேட்டுகள் எமது நாட் டுக்குத் தேவைப்படுகிற தாம். கைத்தொழில் உதவி அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுநடைபெற்றசிலேட் உற்பத்தியாளர் சங்கம், கைத்தொழில் சங்கம், கூட்டு றவு மொத்த விற்பனைத் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டத்தில் கைத்தொழில் உதவி அமைச்சர் திரு எஸ் கே சூரியாராச்சி தலைமை வகித்துப் பேசுகையில் இத் தகவலை தெரிவித்தார்.

அடுத்த வாரம் சிலேட் உற்பத்தியாளரினல் 129,000 சிலேட்டுகள் கூட்டுறவு மொத்த விற் பனைக்களத்துக்கு விநியோ கம் செய்யப்படவிருப்பதாக வும் பெரிய சிலேட் ஒன்றின் விலை 95 சதத்துக்கே விற்கப் படவேண்டும் என்றும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட் டது.

களாங்குளம், தம்பட்டன் முதலிகட்டுக்குளம், பெரிய நொச்சிக்குளம், சின்ன நொச்சிக்குளம் ஆகிய குளங்களில் தண்ணீர் தற் பொழுது இல்லையென்றும் அவற்றுக்குத்தண்ணீர் வெகு விரைவில் அளிக்கவேண்டு மென்றும் முசலி தெற்கு கிராமசபைத்தலைவர் ஜனப் எம். சி. ஏ. கபூர் மன்னர் மாவட்ட நீர்ப்பாசனபொறி யியலாளர் திரு. என். கனக லிங்கத்திடம் கேட்டுள் ளார்.

— —

## படகு சேவை

திருமலை,வியாழன்

மூதூர் - திருமலை படகு சேவை குறித்த நேரத்தில் புறப்படுவதில்லை படகுச் யிவை நேரப்படி வரும் சேயாணிகள் இதனல் பிரும் ஏமாற்றத்துக்குள் பெகின்றனர். இது விஷய ளாக சம்பந்தப்பட்ட அதி காரிகளிடம் மக்கள் முறை மாட்டுள்ளனர்.

## ரயிலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சூட்கேசை பறிகொடு த்த அரசாங்க ஊழியரான மகாதேவா என்பவர் உட னடியாக விபரங்களுடன் பொலிசாரிடம் புகார் செய் திருந்தார்.

இத்திருட்டுக்களைப் பிடிப் பதற்காக மெயில் வண்டிக ளில் தினமும் சாதாரண உடையில் பொலிசார் செல் கின்றனர்.

இரவு நேரத்தில் செல்லும் பிரயாணிகள்பெறுமதியான சாமான்களைக்கொண்டுசெல் லும் போது விழிப்பாக இருக்கவேண்டுமென்றும் பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


## விற்பனைக்கு

மொரிஸ் மைனர் ஈ. எல் 7637, சிற, என்ஜின் ஒரிஜி னல், இல 6, 2-வது ஒழு ங்கை, பிறவுண் வீதி, நீரா வியடி, யாழ்ப்பாணம். 2167

ஆறுகால் மடத்தை அண் டிய 28 பரப்பு வயல் நியா யமான விலையில் விற்பனைக் குண்டு. விபரம்: நேரில் தொடர்புகொள்ளலாம். மகாலிங்கம், 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 2606


## மரண அறிவித்தல்

### மி. இ. சின்னப்பு

யாழ்ப்பாணத்து அளவையூரைச் சேர்ந்தவரும் மலேசியா கோலாலம்பூர் நில அளவைக் கந்தோ ரில் கடமையாற்றியவருமான திரு. மி.இ. சின்னப்பு 6-12-70-ல் கோலாலம்பூரில் காலமானர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அருளப்பு, ஆசிரியர், அளவெட்டி. 2703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org